முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மூலமாக மட்டும் பிறந்த குட்டிகளின் எண்ணிக்கை 67 இலட்சம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றினுடைய மதிப்பு 1,676 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல், இப்போது ஆடு, மாடுகள் தீவனம் இல்லாமல் எங்கேயும் இறக்கவில்லை. மாறாக, அதிக அளவில் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கு இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**9—**

## '108' ஊர்தி சேவை மையம்

***8970—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் '108' அவசரகால ஊர்தி சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, சிவகிரியில் '108' அவசரகால ஊர்தி சேவை மையம் அமைக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எப்பொழுது தொகுதிக்குச் செல்கிறார்களோ, அப்போது அங்கே பச்சைக் கொடியுடன் ambulance வாகனம் தயாராக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*2019 ஜூலை 1*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

**திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் காத்து வழிநடத்திக் கொண்டிருக்கிற நாம் வணங்கும் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தை நோக்கி வணங்குகிறேன். தமிழகத்தை அம்மாவின் வழியிலே சீரோடும், சிறப்போடும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*'108' அவசர கால ஊர்தி சேவை கிடைக்க உடனடியாக அறிவிப்பு கொடுத்து, இவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்ற, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் சுகாதாரத் துறையை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். '108'* ambulance *சிறப்பாகச் செயல்பட்டு வந்தாலும், '108'* ambulance *வாகனத்தின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்தி, இந்தச் சேவையைத் தொடர வேண்டும். '108'* ambulance *மூலமாக நோயாளிகளை ஒரு மருத்துவமனையில் கொண்டுபோய் விட்டுவிட்டாலும், மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்குச் செல்வதற்கு வேறு வாகனங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய நிலைதான் உள்ளது. இதையெல்லாம் நீக்கும்விதமாக '108'* ambulance *வாகனத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்குச் செல்வதற்கும் அனுமதி வழங்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் வாழ்த்துக்கு நன்றி. குறிப்பாக '108'* ambulance *சேவையை ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.*

இந்தியாவிலேயே 936 ஆம்புலென்ஸ், neonatal ambulance, 4 wheeler drive and 2 wheeler ambulance என பல்வேறு வகைப்பாடுகளோடு மிகச் சிறப்பான சேவைகளை வழங்குகின்றோம். உலக அளவில் U.S.A.–வில், ambulance–ன் response time 8 minutes. நம்முடைய மாநிலமும் வளர்ந்த நாடுகளோடு போட்டி போடக்கூடிய நிலையில், சென்னை மெட்ரோவில் ambulance–ன் response time 8.28 minutes என நாம் உறுதிப்படுத்தியிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பிரசவத்திற்கான அழைப்புகள், விபத்திற்கான அழைப்புகள் ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்குச் செல்லக்கூடிய inter–transfer facility ஆகியவற்றிற்கென நல்ல அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தனியாக அறிவிக்க இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரின் இந்தக் கோரிக்கையும் ஏற்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

**திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி, கொடுமுடி ஆகிய இரண்டு தாலுகாக்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 3 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மொடக்குறிச்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகின்ற அந்த மருத்துவமனையை இந்த நிதியாண்டிலே அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*2019 ஜூலை 1]*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தாலுகாவை அறிவிக்கிறார்களோ அங்கெல்லாம் அந்த நிதியாண்டிலேயே, அங்கு செயல்படக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது* non–taluk *மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாக மருத்துவத் துறையின் மூலமாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே மொடக்குறிச்சி தாலுகாவாக அறிவிக்கப்பட்டிருந்தால், மொடக்குறிச்சிக்கு தாலுகா மருத்துவமனை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதி, இறையாண்மை, சுயமரியாதை, கூட்டாட்சியின் தத்துவத்தைக் காத்திடும் வகையில் 37 பாராளுமன்றத் தொகுதிகளிலும், 13 சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றி பெற்றிட காரணகர்த்தாவாக இருந்த தமிழகத்தின் தீபகற்பம் மட்டுமல்ல, இந்தியாவின் தீபகற்பமாக விளங்கும் எங்கள் கழகத் தலைவர் அவர்களுக்கு முதலில் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் தாலுகா மருத்துவமனையில் சிறுநீரகம் இரத்த சுத்திகரிப்பு உபகரணம்* Renal Hemodialysis machine *வாங்கி கிட்டத்தட்ட 6 மாத காலத்திற்கும் மேல் ஆகிவிட்டது. அந்தச் சுத்தகரிப்பு உபகரணம், நோயாளிகளின் பயன்பாட்டிற்கு இன்றுவரை கிடைக்கவில்லை. எந்தவிதத் திட்டமிடல் இல்லாமலும், அடிப்படை வசதிகள் செய்யாமலும்,* Dialysis machine*–க்கு* technician, Diagnostic kit *போன்று ஒன்றுமேயில்லாமலும்* machine*–ஐ மட்டும் வாங்கி வைத்திருக்கிறார்கள்.* Machine*–ஐ வைக்க இடம் இல்லை.* Machine*–ஐ வாங்கிய பிறகு,* J.D. *எனக்கு ஃபோன் செய்து, 'உங்களுடைய* MLA fund*–ல் நீங்கள்* building *கட்டித் தர முடியுமா?' எனக் கேட்கிறார்.* Machine*–ஐ எப்பொழுது வாங்குவோம்?* Lab technician

கிடைக்க வேண்டும், எல்லா வசதிகளும் இருக்க வேண்டும். ஆக, அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்த பிறகுதான் machine–ஐ வாங்க வேண்டும். முதலில் machine–ஐ வாங்கிவைத்து விட்டு, அதனை வைக்க இடமில்லாமல், மக்களின் வரிப் பணத்தை விரயமாக்குவதால்தான், இன்று, NITI Aayog . . .

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டு சொல்லாமல், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** NITI Aayog–ல் *ஒன்பதாவது வரிசையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒரு மருத்துவர். ஏற்கெனவே இந்த* NITI Aayog *என்ன கேள்வி கேட்டிருக்கிறது, அதற்கு நாங்கள் என்ன பதில் சொல்லியிருக்கிறோம் என்பது தங்களுக்கும் தெரியும்.* NITI Aayog–ல் *ஓர் அறிக்கையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மருத்துவமனையில் நடக்கக்கூடிய பிரசவங்கள் 80 சதவிகிதம், 20 சதவிகித பிரசவங்கள்,* domiciliary delivery, *அதாவது வீட்டில்தான் பிரசவங்கள் நடைபெறுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். தாங்கள் மருத்துவராக இதனை ஒப்புக்கொள்கிறீர்களா என்று உங்களிடம் நான் கேட்க விரும்புகின்றேன் என்பது ஒன்று.*

*இரண்டாவது, நம்முடைய தமிழ்நாட்டில்* institutional delivery *என்பது 99.9 சதவிகிதம். 99.9 சதவிகிதம் பிரசவங்கள் மருத்துவமனையில்தான் நிகழ்கின்றன. பிரசவம் குறித்த* wrong data, *தவறான ஒரு கணக்கீட்டின் அடிப்படையில் இந்த* NITI Aayog *அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறையின் அமைச்சர் அவர்களுக்கு நான் நேரடியாகக் கடிதம் எழுதியிருக்கின்றேன். மறு ஆய்வு செய்து,* revised rank *பட்டியலை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். தாங்கள் மருத்துவராக இருப்பதால், இதனை நன்கு அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன்.*

Dialysis–ஐப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் dialysis இயந்திரங்களை அதிகப்படுத்தி வருகிறோம். ஆயிரம் dialysis equipments–ஐ இந்த ஆண்டு கொண்டுவந்து, நாங்கள் achieve செய்திருக்கிறோம்.

பொதுவாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட, தலைநகர மருத்துவமனைகளிலும் எந்தவிதத் தொய்வும் இல்லாமல், இந்த dialysis equipment–ஐ மிகவும் proper ஆக function செய்ய வைத்துக்கொண்டிருக்கின்றோம். அதையும் தாண்டி, non–taluk மருத்துவமனைகளிலும், சிறு நகரங்களிலும் இந்த dialysis வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். தாங்கள் குறிப்பிட்டவாறு, அந்தக் குறைகள் இருந்தால், உடனடியாக ஆய்வு செய்து, MLA fund இல்லாமலேயே, மருத்துவத் துறையின் நிதியைக் கொண்டு, dialysis equipment உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயத்தின் தெய்வமாகவும், எண்ணத்தின் செயலாகவும் இருந்து, எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். இருபெரும் தலைவர்களின் எண்ணங்களுக்குச் செயலாக்கம் கொடுத்து, இங்கே எங்களையெல்லாம் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில், இன்றையதினம் இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில், சிறப்பான முறையில் தமிழகத்தினை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்கள்

நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையில், விதி 110–ன்கீழ், ஜப்பான் பன்னாட்டு முகமையின்கீழ் ஒரு பல்நோக்கு மருத்துவமனையை சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணியனூரில் அமைத்துத் தருவதாக ஓர் அறிவிப்பினைச் செய்திருந்தார்கள். அதனைத் தொடர்ந்து, தொழில்நுட்ப வல்லுநர்களாலும், மருத்துவர்களாலும், அந்த இடம் தர மேம்பாட்டிற்காக ஆய்வு செய்யப்பட்டது. இன்றையதினம் அந்த இடத்திற்குப் பதிலாக அம்மாப்பேட்டை மண்டல அலுவலகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அண்ணா மருத்துவமனை வளாகத்தில் அந்தப் பல்நோக்கு மருத்துவமனையை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனைத் துரிதப்படுத்தி, ஜப்பான் பன்னாட்டு முகமையின்கீழ் கொடுக்கப்படயிருக்கின்ற அந்தப் பல்நோக்கு மருத்துவமனையை விரைவில் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகர மக்கள் மட்டுமல்லாமல், மாவட்ட மக்கள் மட்டுமல்லாமல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் எல்லோரும் இன்றையதினம் சேலம் அரசு பொது மருத்துவமனைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். மகப்பேறு சிகிச்சையிலிருந்து மற்ற அனைத்து சிகிச்சைகளும் சிறப்பாக வழங்கிக்கொண்டிருப்பதாலும், பல மாவட்ட மக்கள் வந்து செல்வதாலும் அதற்கு இணையாக ஒரு பல்நோக்கு மருத்துவமனை தேவைப்படுகின்றது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடந்து கொண்டிருக்கின்ற அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, விரைவாக அந்த மருத்துவமனையை எங்கள் தெற்குத் தொகுதியில் அமைக்க வேண்டும். இங்கே புற்றுநோய்க்குண்டான சிறப்புப் பிரிவை ஒரு மாதத்திற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கொண்டு திறந்து வைத்திருக்கின்றார். கட்டாயம் cancer–க்குண்டான சிறப்பு சிகிச்சையையும் அந்தப் பல்நோக்கு மருத்துவமனையில் உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

அவர்களையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு முக்கிய கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டுக்குமே நல்ல பதில்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட புற்றுநோய் மையத்தைப் பொறுத்தவரை, சேலத்திற்கு புற்றுநோய் சிகிச்சைக்கான மையத்தினை அமைப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே வெளியிடுவார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கேட்ட கோரிக்கை என்பது JICA திட்டம் குறித்ததாகும். இந்தியாவிலேயே முதன்முதலாக, நம்முடைய தமிழ்நாட்டினுடைய கட்டமைப்பினை Japan delegates, JICA நிறுவனம் பாராட்டி 1,684 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, consultant நியமிக்கப்பட்டு, civil works தொடங்கப்படவிருக்கின்றன. அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நிதி அளிக்கக்கூடிய JICA நிறுவனத்திற்கென்று சில procedures இருக்கின்றன. அந்த procedures–ன்படி, அந்தக் கால அளவீட்டின்படி அந்தத் திட்டம் மிகச் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அதிலும், மிகக் குறிப்பாக 1,684 கோடி ரூபாய் நிதியை விடுவித்து, இந்த நிதியாண்டியிலேயே அந்தக் கட்டடத்திற்கான civil work–ம், equipment work–ம் நடைபெறத் துவங்கியிருக்கின்றன. இரண்டு ஆண்டுகளில் அந்தத் திட்டம் நிறைவுபெறும் என்று JICA நிறுவனம் அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டம் முடிவுபெறும்போது, சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற தொகுதியானது மருத்துவத் துறையில் மகத்தான வசதிகளைப் பெற்ற தொகுதியாக

நிச்சயமாக உருவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், நின்ற இடங்களில் ஒன்றைத் தவிர அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்று, இந்திய நாடாளுமன்றத்தில் 3–வது பெரிய கட்சி, அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்கின்ற பெருமையை இன்றைக்கும் தக்க வைத்த எங்களது தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் சார்ந்திருக்கக்கூடிய திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில், ஆடுதுறை, திருவிடைமருதூர், பந்தநல்லூர், திருப்பனந்தாள் போன்ற ஊர்களில் அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைகளில் அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தால், விபத்து ஏற்படும் நேர்வுகளில் விபத்தில் சிக்கியவர்களை கும்பகோணம் மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல நேரிடுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், என்னுடைய தொகுதியில் முழு நேரமும் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் யாருமில்லை. பாபநாசம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆதாரமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருகிலேயே இருக்கிறார். எனவே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருத்துவமனைகளில் ஒரு மருத்துவமனையிலாவது முழு நேரமும் பணியாற்றுகின்ற வகையில், 24 மணி நேரமும் மருத்துவச் சேவையை உறுதி செய்கின்ற வகையில் மருத்துவர்களை நியமித்து, அந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்கு பாதுகாப்பு தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

*2019 ஜுலை 1]*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற* secondary hospitals, *இரண்டாம் நிலை மருத்துவமனைகளில், முழு நேரமும் மருத்துவர்களை நியமிக்க உறுதிப்படுத்துவது என்பதே அரசினுடைய நோக்கம் மற்றும் அரசினுடைய கடமை. அந்தப் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். பொதுவாக படித்து முடித்து வருகின்ற மருத்துவர்கள், மேற்படிப்பு முடித்து வருகின்ற மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், பெருநகரங்களிலும் பணிபுரிவதற்குத்தான் ஆர்வமாக இருக்கின்றார்கள். அதனால்தான் இந்தாண்டுகூட,* service P.G. *அதாவது, ஏற்கெனவே நம்முடைய அரசு மருத்துவக் கல்லூரிகளில்* M.D. *மற்றும்* M.S. *போன்ற படிப்புகளை படித்து முடித்திருக்கின்ற மருத்துவர்கள், அதுமட்டுமல்லாமல்* non–service P.G. *அரசு மருத்துவக் கல்லூரிகளில்* M.D. *மற்றும்* M.S. *போன்ற படிப்புகளைப் படித்து முடித்திருக்கின்ற மருத்துவர்களை, மருத்துவக் கல்லூரி அல்லாத, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாபநாசம், திருவிடைமருதூர் போன்ற பகுதிகளில்* DMS side–*ல் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று ஒரு சிறப்பு ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மூலம் பிறப்பிக்க இருக்கின்றோம். இரண்டாம் நிலை நகரங்களில் மருத்துவச் சேவையை 24 மணி நேரத்திற்கு உறுதிப்படுத்துவதைப் பொறுத்தவரை, மருத்துவர்கள் நியமனம் குறித்து அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள்.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*அந்தத் தடையாணையை விலக்கி, 5 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 500 கிராமப்புற மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கவிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் மருத்துவர்களுடைய சேவை 24 மணி நேரமும் இருப்பதை அரசு உறுதிப்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மிகச் சிறந்த நிருவாகத்திற்குச் சொந்தக்காரர். எந்தக் கேள்வி கேட்டாலும் மறுபடியும் கேள்விகள் கேட்க முடியாத அளவிற்கு விவரமான பதில்களைத் தெரிவித்துவிடுகிறார். அதனால் எங்களால் எந்தக் கேள்வியையும் அவரிடம் கேட்க முடியவில்லை. என்னுடைய தொகுதிக்கு என்னால் செல்ல முடியவில்லை என்று நீண்ட நாட்களாகத் தெரிவித்து வருகிறேன். திருவாடனை மருத்துவமனையில் பிணங்களை postmortem செய்கின்ற இடங்களில் சுவர்கள்கூட இல்லாமல் இருக்கின்றன. உள்ளேயுள்ள இடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அதனால், தயவுசெய்து இந்த முறை திருவாடனை தொகுதிக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடன் நேரடியாக வந்து, அந்த இடங்களை நேரிலே ஆய்வு செய்து உடனடியாக ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்கள் என்றால் அடுத்த முறை நான் சென்று வாக்குகள் சேகரிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். பொதுவாக ஓராண்டுக்கு 10 mortuaries with 6 freezer boxes, fully air–conditioned ஆக நவீன வசதிகளுடன் நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நான் வந்து பார்ப்பதைவிட, அதனைக் கொடுத்துவிட்டு, அதனைத் திறப்பதற்கு நாம் இருவரும் சேர்ந்து செல்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்